மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை
இ.மஎண்.05/2024
உள்
அசல் வழக்கு எண்.44/2018
–––––

1. குருசாமி நாயக்கர் (இறப்பு)
2. சுப்பாலட்சுமி
3. நாகராஜன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சிவபாலன்
2. தமிழ்நாடு அரசு அதன் பிரதிநிதி
மாவட்ட ஆட்சியர் மூலம்
3. வருவாய் வட்டாட்சியர்,
வெம்பக்கோட்டை.
4. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்,
வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ..1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/
1 முதல் 4 பிரதிவாதிகள்

இந்த மனு என் முன்பு 01.09.2025 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A. அருணாசலம், அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. D. பாஸ்கரன், அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது 2, 3 மனுதாரர்களை 2,3 வாதிகளாக சேர்த்தும், மனுவில் கண்டவாறு பிராதை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடுமாறு கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

2.1. மனுவில் மனுதாரர் இறந்து போன அசல் வாதியின் மகன். 2 வது மனுதாரர்.

மனுதாரரது தாயார் ஆவார். மனுதாரர் இந்நிர் 3ம் மனுதாரர்/3ம் வாதி. 2ம் மனுதாரர்/2ம் வாதிக்காகவும் இந்நிர் மனுவை தாக்கல் செய்துள்ளார். வாதியான குருசாமி நாயக்கர் தாவா சொத்து வாதிக்குப் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும் அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தில் வாதி கட்டிடம் கட்டுவதை எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்யாமல் இருக்கும்படி நிரந்தர உறுத்துக் கட்டளை கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2.2. தாவா சொத்து அசல் வாதியின் தகப்பனார் குப்பாழ் நாயக்கர் 15.05.1903ம் தேதியில் கிரையம் பெற்று அனுபவித்து வந்துள்ளார். அதன்பின் அசல் வாதியின் தகப்பனார் கிச்சப்ப நாயக்கர் அடைந்து அனுபவித்து வந்துள்ளார். கிச்சப்ப நாயக்கரின் காலத்துக்குப் பின் அசல் வாதி வாரிசு அடிப்படையில் அடைந்து அனுபவித்து வந்துள்ளார். தாவா சொத்தில் அசல் வாதி கட்டிடம் கட்டுவதற்கு அஸ்திவாரம் போட்டு சுமார் 7 அடி உயரத்தில் 2012ம் ஆண்டிலேயே கட்டிடம் கட்டியிருந்தார். அந்த சமயத்தில் மேற்படி சங்கதிகளை மறைத்து 1ம் எதிர்மனுதாரர் அசல் வாதி மீது சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து கட்டிடத்தை கட்டி முடிக்கவிடாமல் தடுத்துவிட்டார்.

2.3. தாவா சொத்து தொடர்பாக அசல் வாதி மாவட்ட ஆட்சியர் பட்டா வழங்க ந.க.ஜி2/2118/2012–ன் படி உத்தரவு பிறப்பித்துள்ளார். அசல் வாதி மீண்டும் கட்டிடத்தை கட்டி முடிக்க முயற்சித்த போது எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தார்கள். இந்த சூழ்நிலையில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்கில் அசல் வாதி 24.01.2020ம் தேதியன்று மனுதாரரையும் அவருடைய தாயாரையும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். எனவே இறந்து போன அசல் வாதியின் வாரிசுகளான மனுதாரரையும், 2ம் மனுதாரர்/2ம் வாதியையும் வாரிசுகளாக சேர்த்துக் கொள்ள இ.ம.எண்.02/2020–ன் படி கனம் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின்படி மனுதாரரையும், 2வது மனுதாரரையும் 2, 3 வாதிகளாக சேர்த்துக்கொள்ள வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாதபட்சத்தில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3) **<u>1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**:–

3.1. இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர இதர சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பானவைகள் மற்றும் கற்பனையானவைகள் ஆகும். அவைகள் அனைத்தும் இந்நிர் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகின்றன. விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் தற்போது வெம்பக்கோட்டை வட்டத்திற்குட்பட்டு இருக்கும் மேலசத்திரம் கிராமம் சர்வே எண்.383/40–ன் பரப்பளவானது 0.90.5 ஹெக்டேர் (2.23 ஏக்கர்) நிலமானது கிராம நத்தமாகும். கடந்த பல ஆண்டுகளாக பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. கடந்த 1931ம் வருட வாக்கில் இருந்த கட்டிடத்தில் பொதுப்பள்ளிக்கூடம் இயங்கி வந்துள்ளது. அதன்பின்பு பொதுப்பள்ளிக்கு தனிக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பின்பு பொதுப் பள்ளிக்கூடம் இருந்த இடமானது கிராம மக்களின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. கோவில் திருவிழாக்காலங்களில் மேற்படி கட்டிடமானது கோவில் திருவிழாக்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கிடையில் அந்த பழைய கட்டிடமானது சிதிலமடைந்து தற்போது இடிந்து விழுந்து விட்டது.

3.2. அதன் காரணமாக மேற்சொன்ன இடத்தை கிராம மக்கள் சுத்தம் செய்து பொதுப் பயன்பாடுகளான கோவில் மற்றும் திருவிழாக்களுக்கு பயன்படுத்தி வருகின்றார்கள். மனுதாரர் அரசியல் செல்வாக்கு மற்றும் அடியாட்கள் மூலமாக மேற்சொன்ன நத்தம் காலியிடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு முயன்றார்கள். கிராமத்தில் உள்ள பொதுமக்கள் மனுதாரருக்குள்ள அரசியல் செல்வாக்கின் காரணமாக அவரது சட்டத்திற்கு புறம்பான செயல்களை தடுக்க முடியாமல் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 25.06.2012ம் தேதிய மக்கள் குறைதீர் நாளன்று ஊர் பொதுமக்களின் சார்பாக 1ம் எதிர்மனுதாரர் கிராம மக்களின் கையெழுத்தினை பெற்று மனு கொடுத்துள்ளார். மனுக் கொடுத்த பின்பு 1ம் மனுதாரர் சட்டவிரோத செயல்களை செய்ய முயன்றதால் கிராம மக்கள் போராட்டம் நடத்தினார்கள். அந்த போராட்டத்தில் சாத்தூர் தாலுகா வட்டாட்சியர் அவர்கள் தலையிட்டு 1ம் மனுதாரர் சர்வே எண்.383/40ல் மேற்கொண்டு கட்டிடம் கட்டுவதனை நிறுத்துமாறு 1ம் மனுதாரரை கேட்டுக் கொண்டுள்ளார்.

3.3. ஆனாலும் 1ம் மனுதாரருக்கு இருந்த அரசியல் செல்வாக்கின் காரணமாக அப்போதைய சாத்துார் தாலுகா வட்டாட்சியர் 1ம் மனுதாரரின் மீது சாந்தமான போக்கிடை கடைபிடித்து வந்துள்ளார். இதற்கிடையில் கிராம மக்கள் 1ம் மனுதாரரின் சட்ட விரோத செயல்களை கண்டித்து போராடி வந்துள்ளார்கள். ஆனால் வாதி அவருக்குள்ள அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி மாவட்ட ஆட்சியாளர், சாத்துார் வட்டாட்சியர் மற்றும் துலுக்கன்குறிச்சி கிராம பஞ்சாயத்து தலைவர் ஆகியோர்களிடம் தவறான தகவல்களை கூறி மேற்கொண்டு கட்டிடம் கட்டுவதற்கு முயன்றுள்ளார். கிராம நிர்வாக அலுவலர் சர்வே எண்.383/40 ஆனது அரசு புறம்போக்கு நிலம் என சான்றிதழ் கொடுத்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் 25.06.2012ம் தேதிய மனு மீது விருதுநகர் மாவட்ட ஆட்சியாளர், சாத்துார் வட்டாட்சியர் மற்றும் துலுக்கன்குறிச்சி பஞ்சாயத்து தலைவர் ஆகியோர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் 1ம் எதிர்மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP (MD) No.9565/2012ல் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்பு 2, 3 எதிர்மனுதாரர்கள் மேற்படி 1ம் மனுதாரரின் கட்டிடம் கட்டுவதை தடுத்து நிறுத்தி விட்டார்கள். மேற்படி WP (MD) No.9565/2012 ல் 21.01.2012ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவில் 1ம் எதிர்மனுதாரர் 25.06.2012ம் தேதி மனுவின் மீது 1ம் எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் அறிவிப்புகள் வழங்கி விசாரணை செய்த தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3.4. மேலும் 1ம் எதிர்மனுதாரர் 25.06.2012ம் தேதிய மனுவின் நகலை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையில் 1ம் எதிர்மனுதாரர் சிவகாசி வருவாய் கோட்டாட்சியரை சர்வே எண்.383/40 விஸ்தீரணம் 0.00.90.5 ச.மீ நிலததில் 1ம் எதிர்மனுதாரர் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டு அதன் விபரத்தினை 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் தெரிவிக்க வேண்டுமென கடிதம் எழுதியுள்ளார். அதன்பின்பு 1ம் எதிர்மனுதாரர் 25.06.2012ம் தேதிய மனுவின் மீதான விசாரணையில் சாத்துார் தாலுகா வட்டாட்சியர் அவர்கள் 1ம் மனுதாரருக்கு சாதகமாக உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன் உத்தரவினை நசியச் செய்வதற்கு 1ம் எதிர்மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P. (MD) No.20193/2013–னை தாக்கல்

செய்துள்ளார். மேற்சொன்ன நீதிப்பேராணையின் உத்தரவில் தாவா வழக்கில் இறந்து போன 1ம் மனுதாரரின் வாரிசுகளை சேர்க்க கோரி இ.ம.எண்.02/2020 என மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்குரையில் சீர்திருத்தம் செய்வதற்கு 24.02.2021ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் வழக்குரையில் சீர்திருத்தம் செய்யாமல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து வழக்குரையினை சீர்திருத்தம் செய்ய போதிய அவகாசம் வழங்கிய போதிலும் மனுதாரர்கள் மனு தாக்கல் செய்யாது தாவா வழக்கினை வீண் காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவும், சுமார் 5–1/2 வருடங்களுக்கு மேல் காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மனுதாரரது மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மேற்படி மனுவில் 3–1/2 ஆண்டுகளுக்கு மேல் காலதாமதமாக தாக்கல் செய்ததற்குண்டான குறிப்பிட்ட சரியான காரணங்கள் ஏதும் மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை. எனவே மனுதாரர்களின் மனுவினை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>6) தீர்வு</u>:–

6.1. மனு பரிசீலிக்கப்பட்டது. பிராதை சீர்திருத்தம் செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், தாவா சொத்து வாதிக்குப் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக வாதி கட்டிடம் கட்டுவதை பிரதிவாதிகள் இடையூறு செய்யாமல் இருக்கும்படி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் அசல் வாதி கட்டிடம் கட்டுவதற்கு அஸ்திவாரம் போட்டு சுமார் 7 அடி உயரத்தில் 2012ம் ஆண்டிலேயே கட்டிடம் கட்டியிருந்ததாகவும், அந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் அசல் வாதி மீது சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து கட்டிடத்தை கட்டி முடிக்கவிடாமல் தடுத்துவிட்டார். அசல் வாதி மீண்டும்

கட்டிடத்தை கட்டி முடிக்க முயற்சித்த போது எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தார்கள் என்பதால் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில் அசல் வாதி இறந்து விட்டதால் அவரது வாரிசுகளான மனுதாரரையும், 2ம் மனுதாரரையும் அசல் வழக்கில் வாதிகளாக சேர்க்க கோரி இ.ம.எண்.02/2020 மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே 2, 3 மனுதாரர்களை அசல் வழக்கில் வாதிகளாக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டி இந்த மனு தாக்கல்.

6.2. 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், தாவா வழக்கினை வீண் காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவும், 1ம் எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்பதற்காகவும் சுமார் 3–1/2 வருடங்களுக்கு மேல் காலதாமதமாக தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

6.3. மனுவின் ஆவணங்கள், வாதுரைகள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் மனுவை குறித்து கோரிய நிவாரணங்கள் ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 2, 3 மனுதாரர்களை வாரிசாக சேர்த்துக் கொள்வதற்கு இ.ம.எண்.02/2020 ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவையும் அங்கீகரித்து நீதியின் பால் கருதி மனுதாரர் அ.வ.எண்.44/2018 ல் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட 3–1/2 வருட காலவிரையத்திற்கு, மனுதாரர்கள் செலவுத் தொகை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதித்து, மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகை ரூ.500/–ஐ 24.09.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், செலுத்த தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 24.09.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.05/2024
உள்
அ.வ.எண்.44/2018
**<u>உத்தரவு</u>**
நாள்– 12.09.2025.